என்று சொல்வது சரியல்ல. ஒன்றாகவே இருந்து வேலைகளை எல்லாம் பார்த்துவிட்டு போகலாம். ஆகவே இதைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லுவதை அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இங்கு வேலைபார்த்து வருகிற வாட்ச் அண்ட் வார்ட் போலீஸ் காரர்களுக்கு தினப்படி 11 அணா கொடுக்கப்படுவதாகவும், அதில் ஹெட் கான்ஸ்டபிளாக இருந்தால் ரூபாய் ஒன்று கொடுக்கப்படுவதாகவும் சொல்லுகிறார்கள். இது மிகவும் குறைவு. இதை ஹ்யூமன் அப்ரோச் சோடு பரிசீலனை செய்து பார்த்து அவர்களது படிச் செலவை சிறிது அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் பெரிய செலவு ஒன்றும் ஏற்பட்டு விடாது, சிறிது கூடுதலாக செலவானாலும் பரவாயில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த ராஜ்யத்தில் இருக்கின்ற மந்திரிகள் பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் சில மந்திரிகள் தங்க ளுக்குத் தகுந்தவாறு வேண்டியதை எல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு சிறிய விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். திருநெல் வேலி ஜில்லாவில் சேந்தமரம் என்ற ஒரு கிராமம் இருக் கிறது. அங்குள்ள பஞ்சாயத்து போர்டுக்கு எலக்ஷன் நடந்தது. அதில் ஒரு ரோமன் கத்தோலிக் ஆளும், ஒரு நாடார் ஆளும் போட்டியிட்டார்கள். நாடார் ஜயித்து விட்டார். உடனே தோற்றுப்போன ரோமன் கத்தோ லிக்கை சேர்ந்தவர் இங்கு வந்தார். இங்கு வந்து அப்போது பஞ்சாயத் போர்டு பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த கனம் அமைச்சர் லூர்தம்மாள் அவர்களிடம் வந்து என்ன சொன்னார்களோ தெரியாது, அந்த கிராமத்தை இரண்டாக பிரித்து, ரூரல் சேந்தமரம் என்றும், அர்பன் சேந்தமரம் என்றும் இரண்டாகப்பிரித்து, அதில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத் துக்கு, ரோமன் கத்தோலிக்காக இருப்பவர் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார். இப்படியெல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. ராஜாஜி காலத்தில் செக்ரடேரியட்டைப் பொறுத்த அளவில் இம்மாதிரியெல்லாம் தவறுகள் நடக்காதவாறு பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த முறையில் இப் போதும் நிர்வாகம் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

IV ANNOUNCEMENTS—*cont.*

(2) Business of the House.

MR. SPEAKER: I have to announce to the House the following programme as decided by the Business Advisory Committee at its meeting held at 11 a.m. today.

I. The Committee decided that on the 27th April 1960 the following Bills be taken up in the order given below:—

(1) The Legal Practitioners' (Madras Amendment) Bill, 1960.

(2) The Madras District Collectors' Powers (Delegation) Amendment Bill, 1960.

(3) The Madras Judicial Proceedings (Regulation of Reports) Bill, 1960—to be referred to a Joint Select Committee.

(4) The Madras City Tennants' Protection (Amendment) Bill, 1960—as reported by Select committee.

II. The Committee also decided that the discussion on Demand VIII—Irrigation, and Demand XXXVII—Capital outlay on Irrigation, be confined to 3½ hours on 28th April 1960, instead of four hours.

27th April 1960] [Mr. Speaker]

III. The Committee also decided that the following official Bills be taken up from 1 p.m. on the 28th April 1960:—

(1) The Madras gramdan Villages, (Repayment of Debts), Amendment Bill, 1960.

(2) The Madras Coinage (Alteration of References) Bill, 1960.

(3) The Courtallam Township, (Validation of Taxes and Library Cess), Bill, 1960.

VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1960-61—*cont.*

SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற மான்யம், அமைச்சர்கள், கவர்னர், நம்முடைய சட்டசபை தேர்தல் ஆகிய எல்லா விஷயங்களைப் பற்றியும் ஒன்றாகச் சேர்த்து விவாதிக்க நேர்ந்திருக்கிறது. இதன் காரணமாகப் பல விஷயங்களைப்பற்றி பேச முடியாமலும் போகலாம்.

(Deputy Speaker in the Chair.)

இருந்தாலும் இதில் நான் முக்கியமாக சொல்ல விரும்புவது, சம்பள கமிஷன் அறிக்கை சர்க்காருக்கு சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அரசாங்கத்தின் முன்பு இப்போது பரிசீலனைக்காக இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இருந்தாலும் இதை துரிதமாக பரிசீலனை நடத்தி அதன் பேரில் நடவடிக்கைகள் எடுத்து அதை வெளியிடுவார்களானால் வெளியில் பொது மக்களிடையே இருக்கக்கூடிய அதிருப்தியை போக்குவதற்கு வழியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது என்.ஜி.ஓ.க்கள் ஆசிரியர்கள் போன்றவர்களிடையே இவ்விதம் காலதாமதம் ஆவதைப்பற்றி பலவிதமான சந்தேகங்கள் எழுகின்றன, அதன் காரணமாக, அதை அனுசரித்து பலவிதமான கிளர்ச்சிகளும் நடைபெறுகின்றன. ஆகவே இதன்மீது சிக்கிரமாக முடிவு எடுத்து வெளியில் தெரிவிக்க வேண்டும், அல்லது, இவ்விதம் சிக்கிரமாக வெளியிடுவதற்கு இதில் ஏதாவது சங்கடங்கள் இருக்குமானால் இதைப்பற்றி முடிவு எடுப்பதற்கு முன்னால் இந்தச் சபையிலுள்ள எதிர்கட்சி தலைவர்கள் எல்லோரையும் கூட்டி வைத்து, இதில் என்னென்ன சங்கடங்கள் இருக்கின்றன என்று சொல்லட்டும், அதற்கு ஏதாவது பரிகாரங்களை எங்களால் சொல்ல முடியுமானால் சொல்லுகிறோம், அதையும் அரசாங்கம் பரிசீலித்து அதன் பின்னால் என்ன முடிவு எடுக்க முடியுமோ அதற்குத் தகுந்தவாறு முடிவு செய்துகொள்ளலாம். இம்மாதிரி ஏதாவது சிக்கல்கள் ஏற்படுகின்ற பொழுது, எதிர்க்கட்சிகளை அவற்றில் சிக்க வைப்பதில் நமது நிதி அமைச்சர் அவர்கள் நல்ல அனுபவமுடையவர்தான். (கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம்: அப்படி எதில் சிக்க வைத்திருக்கிறேன்.) வேண்டுமென்று சிக்கவைக்காவிட்டாலும், அம்மாதிரியான ஒரு நிலை கடைசியில் வந்துவிடுகிறது. இவ்விதம் எதிர்க் கட்சிகளைகூட்டி, அதன் மீது ஏதாவது முடிவு எடுத்துவிட்டால், அதை வெளியில் சொல்லி, இதை நாங்கள் மட்டும் செய்யவில்லை, எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்துதான் செய்திருக்கிறது என்று சொல்லுவது சகஜமாய் இருந்து வருகிறது. அதனால்தான் இதைச் சொன்னேன். அந்த நோக்கத்தோடு செய்வதாக இருந்தாலும்கூட, அந்த சங்கடங்களை எல்லாம் எதிர் கட்சியினராகிய நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம் என்பதை சொல்லிக்கொள்கிறேன். எந்தவிதத்திலாவது இந்தப் பிரச்னைக்கு சிக்கிரமாக ஒரு முடிவு காண வேண்டும் என்று விரும்புகிறேன்.

அதோடு கூடியவரையில் சர்க்கார் துறையிலாவது, தொழில் அமைதியை நிலை நாட்டுவதில் நமது அமைச்சர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சமீப காலமாக எலக்ட்ரிஸிட்டி டிப்பார்ட்மெண்டில் தொழிலாளர்களிடையே அதிருப்தி வளர்ந்து கொண்டுவருகிறது. இரண்டு வருடங்களுக்கு முன்னால் இந்தத் தொழிலாளர்கள் ஸ்ட்ராக்